**(2023-24-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE 23 UTM 509**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2025

பி. ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

ஐந்தாம் பருவம் — நேரம் : 3 மணி

## பகுதி – 3

## காப்பியங்கள்

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. ‘கௌரியர்’ என்பது ...........

   அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

2. “தூநீர் மாலை தூத்தகை இழந்தது” யார் கூற்று?

   அ) வயந்தமாலை ஆ) மணிமேகலை இ) சுதமதி ஈ) மாதவி

3. கூற்றுவனும் அஞ்சும்படி வாயைப் பிளந்துநின்ற அரக்கி யார்?

   அ) சுரசை ஆ) சூர்ப்பணகை இ) திரிசடை ஈ) தடாகை

4. அநபாயச் சோழனின் ஆட்சி நிலை பெற்ற ஊர் எது?

   அ) கொற்கை ஆ) காவிரிபூம்பட்டினம்

   இ) பெரும்பட்டினம் ஈ) அமராவதி

5. ‘திருமணப் படலம்’ தேம்பாவணி முதற்காண்டத்தின் எப் படலமாகும்.

   அ) 3 ஆ) 5 இ) 7 ஈ) 9

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. பொருள் தருக – ‘உவணச் சேவல்’.
7. குபேரதத்தன் தனது மகள் சுரமஞ்சரிக்கு அளித்த சீதனப்பொருட்கள் சிலவற்றை எழுதுக.
8. ‘மதலை’ - குறிப்புரைக்க.
9. திருவிளையாடற் புராணம் கூறும் ‘விடையவன்’ என்பது?
10. ‘அடவி’ – பொருள் தருக.

### பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்கள் )

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. அ) பாணன் மதுரைக்கு வழி கூறிய திறத்தினைப் புறஞ்சேரி இறுத்த காதை வழி விவரி.

    (அல்லது)

    ஆ) குரங்குக்கை வானவன் குறித்து எழுதுக.

12. அ) உவவனத்தின் சிறப்பினை எழுதுக..

    (அல்லது)

    ஆ) சீவகனின் அந்தண வேடத்தின் நோக்கையும் போக்கையும் விவரி.

(த.பி.பா.)

ETHICAL PAPER

13. அ) மகேந்திரமலையில் அனுமனின் கால் பட்டவுடன் நடந்த விளைவுகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) வேந்தர்களின் சினத்தைக் கண்ணன் தணித்த விதத்தை எழுதுக.

14. ஆ) இயற்பகை நாயனாரைச் சுற்றத்தார் தடுத்தப் பாங்கினை விவரி.

(அல்லது)

ஆ) இறைவனுக்கும் வஞ்சிக்கும் நடைபெற்ற உரையாடலைத் திருவிளையாடற் புராணம்வழி விளக்குக.

15. அ) எப்பொருளையும் தெய்வமாகக் கருதிய குருடர்கள் எவற்றையெல்லாம் ஒழித்ததாகத் தேம்பாவணி கூறுகின்றது.

(அல்லது)

ஆ) நபிகள் நாயகம் உடும்புடன் உரையாடிய விதத்தை எழுதுக.

## பகுதி – இ ( 5 X 8 = 40 மதிப்பெண்கள் )

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4 Or K5)**

16. அ) அடைக்கலக் காதையிலுள்ள கிளைக்கதைகள் பகரும் அறத்தைக் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) ஆயர்கள், ஆய்ச்சியர் குரவை ஆடியதன் நெறிமுறைகளை விவரிக்க.

17. அ) உதயக்குமாரனின் மனவெழுச்சியை ‘மணிமேகலாதெய்வம் வந்து தோன்றிய காதையின்வழி ஆராய்க.

(அல்லது)

ஆ) சீவகனின் இசைத்திறத்தைச் ‘சுரமஞ்சரியார் இலம்பகத்தின்வழி’ கட்டுரைக்க.

18. அ) அனுமன் விண்ணில் சென்றக் காட்சியைக் கம்பர் பதிவுசெய்த திறத்தை ஆராய்க.

(அல்லது)

ஆ) கைலாய மலையில் அர்ச்சுனன் தவம்புரிந்த விதத்தைக் கட்டுரைக்க.

19. அ) இயற்பகை நாயனார் புராணத்தைச் சமூகவியல் நோக்கில் ஆராய்க.

(அல்லது)

ஆ) சிவபெருமானின் திருவிளையாடலைப் ‘பிட்டுக்கு மண்சுமந்த’ படலத்தின்வழி நிறுவுக.

20. அ) கடவுளை அவதரிக்கச் செய்வதற்கான சூசையின் வேண்டுதல்களை எழுதுக.

(அல்லது)

ஆ) ‘உடும்புப்பேசிய படலத்தின்வழி’ நபிகள் நாயகத்தின் ஜீவகருண்யத்தை நிறுவுக.

*ETHICAL PAPER*

******